# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை – 600 032.
தொலைபேசி:044-22201337
மின்னஞ்சல் முகவரி:ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032
முன்னிலை: முனைவர் சோ.அய்யர், இ.ஆ.ப.,(ஓ),
......................

முறையீட்டு மனு எண்: 0308/15/ந

ஆ.எண்: 0176/16

நாள்: 03-12-16

1 திரு பொ செல்வராஜன்
த/பெ பொன்னுச்சாமி நாயுடு
39/19, முனியன் தெரு, புதுப்பேட்டை (அஞ்சல்)
ஆத்தூர், சேலம் மாவட்டம் - 636 141 — மனுதாரர்

2 திருமதி உமாராணி,
முன்னாள் நகர்மன்றத் தலைவி,
ஆத்தூர், சேலம் மாவட்டம் - 636 141 — எதிர் மனுதாரர்

## ஆணை:

மனுதாரர் தனது 02-11-15 நாளிட்ட கடிதம் மூலம் ஆத்தூர் நகர்மன்றத் தலைவியின் மீது சில ஊழல் புகார்கள் தெரிவித்திருந்தார் மேற்படி மனு இம் முறை மன்ற நடுவத்தில் 06-11-15 அன்று பெறப்பட்டு எண் 0295/15 ஆக பதிவு செய்யப்பட்டது மேலும் கடித எண் 0295/அ1/முறைமன்ற நடுவம் 2015 1 நாள் 17-11-15-ல், 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல் விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில் விதி-4-ன் படி உரிய படிவத்தில்

கோரப்பட்டுள்ள விவரங்களுடன் ரூபாய் பத்து மதிப்பிலான் நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் முறையீட்டு மனுவினை அனுப்பி வைத்திடுமாறு மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டது

அதன்படி மனுதாரர் தனது முறையான 27 11 15 நாளிட்ட மனுவினை அனுப்பி வைத்தார் அம்மனு 30-11-15 அன்று இம் முறை மன்ற நடுவததில பெறப்பட்டு எண் 308/15 ஆக பதிவு செய்யப்பட்டது மனுதாரது மனுவில் எதிர் மனுதாரரான ஆத்தூர் நகர் மன்றத் தலைவி திருமதி உமாராணி க/பெ V பிச்சைக்கண்ணன் என்பவர் மீது கீழ்க்கண்டவாறான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்துள்ளார்

1 17-10-11-ல் நடைபெற்ற நகராட்சித் தலைவர் தேர்தலுக்கான தனது வேட்பு மனுவுடன் தாக்கல் செய்த உறுதி மொழி ஆவணத்தில் குறிப்பிட்டிருந்த சொத்துக்கான விவரத்தில் 40 பவுன் என்று இருந்ததை 26-05-15-ல் தனக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ நகராட்சியால் வழங்கப்பட்ட மேற்படி ஆவண நகலில் 140 பவுன என்றும் விலை மதிப்பு ரூ 7,30.000/- என்பதை ரூ 17,30.000 என்றும் திருத்தம் செய்துள்ளது

2 உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு பல கோடி லஞ்சமாக பெற்று தனது கணவர் பெயரில் 25-01-12-ல் ஆத்தூர் நகராட்சி வார்டு 16-ல் குமணன் தெருவில் கதவு எண் 25/71 என்ற வீட்டை 1080 சதுர அடி காலி நிலமாகவும், 72½ சதுர அடி தார்சு வீடும், 408 சதுர அடி ஓட்டு வில்லை வீடாகவும் ஆக மொத்தம் 1560 சதுர அடி வீட்டை வாங்கியது இதன் மதிப்பு ரூ 54 60 000/ ஆனால் பத்திரப் பதிவு ரூ 8.10,000/ க்கு மட்டுமே காட்டப்பட்டது

3 2014-ல் ரூ 30 00.000/- செலவு செய்து பழைய வீட்டையும் காலியாக இருந்த 1080 சதுர அடி நிலத்திலும் புதியதாக தார்சு வீடு கட்டியுள்ளது இதன் மதிப்பு ரூ 85,00,000/- இது லஞ்சப் பணத்தில் வாங்கப்பட்டது

4. திருமதி P. உமாராணி அவர்களது கணவர் திரு. V. பிச்சைக்கண்ணன் பெயரில் ஆத்தூர் தாலுகா நரசிங்கபுரம் பகுதியில் சர்வே எண் 406/1-ல்

3.92½ ஏக்கர் நிலம் ரூபாய் 2 கோடியே 40 லட்சத்திற்கு வாங்கியுள்ளது அதன் மதிப்பீடு ரூபாய் 13 லட்சமென்று பத்திரப் பதிவு செய்துள்ளது

5. 2011 உள்ளாட்சித் தேர்தலில் நகர் மன்றத் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சர்வே எண் 526/3, கதவு எண் 53/24A பெரியார் நடுத்தெரு நகராட்சி வார்டு எண் 30-ல் உள்ள வீட்டை இடித்துவிட்டு ரூபாய் முப்பது லட்சம் செலவழித்து புதிய வீடாக கட்டியுள்ளது.

6. திரு V பிச்சைக்கண்ணன் பெயரில் சர்வே எண் 526/3 க எண் 35/17B பெரியார் நடுத்தெரு நகராட்சி வார்டு எண் 30 ல் உள்ள வீட்டை புும் இடித்துவிட்டு ரூபாய் 40 லட்சம் செலவில் புதிய வீடாக கட்டியுள்ளது

7. திரு V பிச்சைக்கண்ணன் பெயரிலுள்ள ஆத்தூர் IDBI சேமிப்புக் கணக்கில் பல கோடி ரூபாய் வரவு செலவும் திருமதி P உமாராணி மற்றும் அவரது கணவர் பெயரில் உள்ள ஆத்தூர் இந்தியன் வங்கி சேமிப்புக் கணக்குகளில் பல லட்சம் ரூபாய் வரவு செலவும் நடைபெற்றுள்ளன

8. 2011 உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் திரு பிச்சைக்கண்ணன் பெயரில் இரண்டு ஸ்கார்பியோ (SCORPIO) கார்கள் வாங்கப்பட்டன இவற்றின் மதிப்பு ரூ 25,00,000/-

மேற்படி மனுதாரரது புகார்கள் தொடர்பாக இம்முறை மன்ற நடுவ கடித எண் 308/15 நாள் 08-12-15 மற்றும் 15.02.16-ன் மூலம் ஆத்தூர் நகராட்சி ஆணையரது அறிக்கை கோரப்பட்டது மேலும் 06-06-16 அன்று விசாரணைக்கு வருகை தருமாறு மனுதாரருக்கும் அழைப்பாணை (அ.ம எண் 308/15/ந நாள் 21-04-16) அனுப்பப்பட்டது அதன் பின்னர் மனுதாரர் 05-05-16 நாளிட்ட தனது பிறிதொரு மனுவினை அனுப்பி வைத்துள்ளார் அம்மனு 0398/16 ஆக எண்ணிடப்பட்டுள்ளது மேற்படி மனுவில் எதிர் மனுதாரர் திருமதி P உமாராணி ரூ 1,22,000/-க்கு கிரையம் செய்துள்ள காலிமனை (சர்வே எண் 526/3, வார்டு எண் 30 பெரியார் நடுத் தெரு, எண் 53) குறித்த பத்திர நகலினையும் இணைத்து அனுப்பியுள்ளார் இப்பத்திரப் பதிவு விவரங்களைப் பரிசீலித்ததில் இது 10-01-11-ல் நடைபெற்றுள்ளது 2011 உள்ளாட்சி தேர்தலுக்குப் பல மாதங்கள் முன்பு நிகழ்ந்துள்ள இவ்வினம் குறித்து எவ்வித புகாரும் எழுப்பப்படவில்லை

ஆனால் மனுதாரர் 06-06-16 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜரானபோது சமர்ப்பித்துள்ள வாக்குமூலத்தில் தனது பிற புகார்களுடன் மேற்குறிப்பிட்ட கிரையம் செய்யப்பட்ட நிலம் குறித்தும் குறிப்பிட்டு 3 ஆவணங்கள் மூலம் நகர் மன்றத் தலைவி மற்றும் அவர் கணவர் ஆகியோர் நகர் மன்றத் தலைவியாக பதவிக்கு வந்த பின்பு ரூ 22.42 லட்சம் மதிப்பில் கிரையம் பெற்றுள்ளார்கள் என குறிப்பிட்டுள்ளார் மேற்குறிப்பிட்டவாறு 10-01-11-ல் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளதையும் சேர்த்து குறிப்பிட்டுள்ளது தவறானது மட்டுமின்றி உள்நோக்கம் அல்லது காழ்ப்புணர்ச்சி காரணமாக இருக்கக் கூடுமென்ற ஐயப்பாட்டிற்கும் வழிவகுக்கிறது

ஆத்தூர் நகராட்சி ஆணையரது அறிக்கை ந க எண் 4238/15/சி1 நாள் 21-03-16 பரிசீலிக்கப்பட்டது அதில் மனுதாரரது குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆவணங்களின் அடிப்படையில் கீழ்கண்ட விவரங்களுக்கான பதில் அளிக்கப்பட்டுள்ளது

i. 23-09-11-ம் ஆண்டு நகர்மன்றத் தலைவர் தேர்தல் வேட்பு மனுவில் சமர்ப்பித்துள்ள உறுதிமொழி ஆவண சான்றுரையின்படி அசையும் சொத்து விவரத்தின்படி 140 பவுன் உள்ளது அதன் மதிப்பு ரூ 17,30,000/- என உள்ளது அடித்தல் திருத்தம் ஏதும் காணப்படவில்லை.

ii. வார்டு எண் 16-ல் உள்ள குமணன் தெரு. கதவு எண் 25/71 என்ற வீட்டை அரசு மதிப்பீட்டு விலைக்குத் தான் பத்திரம் வாங்கி பதிவு செய்யப்பட்டுள்ளது அதுவும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியில் அடமானக் கடன் ஆவண எண் படி 10-09 14 ந் தேதியில் கடன் (எண் 204049149) பெறப்பட்டு உள்ளது மேற்கண்ட வீட்டின் மராமத்து பணிகளை தனது நகைகளை அடமானமாக வைத்து செய்யப்பட்டுள்ளது.

iii. ஆத்தூர் தாலுகா நரசிங்கபுரம் சர்வே எண் 406/1-ல் 3 92 ஏக்கர் நிலம் தனது நகைகள் மற்றும் தனிநபர் கடன் மூலமாக வாங்கப்பட்டுள்ளது

iv 28.01.10 பதிவு எண்:3300811/07286E அபிராமி என்ற நிறுவனம் மூலம் வருமானத்தால் க.எண் 53/24-ஏ, பெரியார் நடுத்தெருவிலுள்ள வீடு மராமத்து பணிகள் செய்யப்பட்டுள்ளது

v க.எண் 35/17-பி பெரியார் நடுத்தெருவிலுள்ள வீடு 1991-2006 வரை ஆத்தூர் நகராட்சில் ஒப்பந்ததாரராக பணி செய்யும் போது கட்டப்பட்ட வீடு தற்போது எந்தவிதமான மாறுதலும் மராமத்து பணிகளும் செய்யவில்லை

vi எதிர் மனுதாரர் மற்றும் அவரது கணவரது பெயரிலுள்ள IDBI மற்றும் இந்தியன் வங்கி கணக்குகளின் வரவு செலவு குறித்து பட்டியல்கள் அளிக்கப்பட்டுள்ளன

vii டி.எண் 04 ஏ.சி.1090 CQNPIO வாகனம் ஆத்தூர் விஜயராம் நிதி நிறுவனம் மூலம் 06-11-13-ந் தேதியில் தவணைக் கடனாக பெறப்பட்டுள்ளது டி.எண் 77 இ-004 எண்ணுள்ள வாகனம் HDFC வங்கியில் கடன் (எண் 33049870) மூலம் பெறப்பட்டது வங்கிகளின் பட்டியல்கள் பெறப்பட்டன மனுதாரர் தரப்பில் சாட்சிகள் எவரேனும் விசாரிக்கப்பட வேண்டுமென கருதும் பட்சத்தில் அத்தகைய நபர்களின் பெயர் முகவரி விசாரணைகளைத் தெரிவிக்குமாறு இம் முறை மன்ற நடுவ அறிவிப்பாணை அ.ம.எண் 0308/15/ந நாள் 07-06-16-மூலம் ஆணையிடப்பட்டது மேலும் எதிர் மனுதாரரை 30-09-16 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து அழைப்பாணை (அ.ம.எண்: 0308/15/ந நாள்: 06-09-16) அனுப்பப்பட்டது நடைபெற இருந்த உள்ளாட்சிகளுக்கான சாதாரண தேர்தல்களைக் கருதி மேற்படி விசாரணை ஒத்திவைக்கப்பட்டு எதிர் மனுதாரருக்கு அறிவிப்பாணை (அ.ம.எண் 0308/15/ந நாள் 16-09-16) அனுப்பி வைக்கப்பட்டது

மேற்படி ஒத்தி வைக்கப்பட்ட விசாரணை 16.11.16 அன்று நிர்ணயிக்கப்பட்டு அழைப்பாணை அ.ம.எண் 0308/15/ந நாள் 17-10-16 எதிர்

மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டது அதன்படி எதிர் மனுதாரரான முன்னாள் நகர்மன்றத் தலைவி திருமதி பி.உமாராணி 16-11-16 அன்று இம் முறை மன்ற நடுவத்தின் முன் நேரில் ஆஜாராகி தனது தரப்பிலான விளக்கங்களையும் ஆவணங்களையும் சமர்ப்பித்தார் அவரால் கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது

"மனுதாரர் திரு P செல்வராஜின் அவர்களின் மனைவி, நான் தலைவர் பதவிக்கு தேர்தலில் நிற்கும் போது மன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வி அடைந்துவிட்டார் நான் தேர்தல் உறுதிமொழிப் படிவத்தில் மனுதாரர் சொன்னது போன்று 40 பவுன் என்று குறிப்பிடவில்லை 140 பவுன் நகை இருந்தது எனது கணவர் ஆத்தூர் நகராட்சி வார்டு 16-ல் குமணன் தெருவில் வீடு வாங்கியது உண்மைதான் ரூபாய் 19 லட்சத்திற்கு வாங்கினேன் இதற்கு என் நகைகள் மற்றும் எனது சகோதரி சித்ரா உடன் பிறந்த தங்கை திருமதி உஷா எனது சித்தி பாப்பாத்தி ஆகியோர் நகை பணம் கொடுத்தார்கள் அவைகளை வைத்து தான் வீடு வாங்கி உள்ளேன் அந்த வீட்டை பராமரிப்பு பணிகள் செய்துள்ளேன் நரசிங்கபுரம் நகராட்சியில் 5 ஏக்கர் நிலம் வாங்கி உள்ளேன் 3 ஏக்கர் பட்டா நிலம் மீதி புறம்போக்காகவும் ரூபாய் 17 லட்சத்திற்கு வாங்கினேன் எனது அண்ணன் அண்ணாமலை அவர்களிடம் கடன் வாங்கி மற்றும் சிலரிடம் பணம் பெற்று வாங்கினேன் தற்போது அண்ணாமலை அவர்களுக்கே அந்த நிலத்தை குத்தகைக்கு விட்டுள்ளேன் பெரியார் நடுத்தெருவில் வார்டு எண் 30-ல் உள்ள வீட்டில் ரூபாய் 30 லட்சம் செலவு செய்து கட்டியது என்பது உண்மையல்ல பெயிண்டிங் மட்டும் அடித்துள்ளேன் பெரியார் நகரில் உள்ள இன்னொரு வீட்டை இடித்துவிட்டு ரூபாய் 40 லட்சம் செலவு செய்துள்ளேன் என்பதும் சரியல்ல IDBI வங்கியில் எனக்கு எந்த அக்கவுண்டும் இல்லை இந்தியன் பேங்கில் உள்ள கணக்கிலும் நானும் எனது கணவரும் வரவு செலவு செய்யவில்லை ஸ்கார்பியோ (SCORPIO) கார் பழையது ரூபாய் 3 லட்சத்திற்கு எனது கணவர் வாங்கினார் அதில் பழுதுகள் அதிகமாக இருந்ததால் அதை விற்றுவிட்டு புதியதாக ஸ்கார்பியோ (SCORPIO) கார் வாங்கினார் அதனையும் தவணை முறையில் தான் வாங்கி உள்ளோம் பழைய காரையும் விற்றுவிட்டோம் நான் எனது குழந்தைகளுக்கு திருமணம் செய்ய தாட்கோ வங்கியில் கடன் பெற்று செலவு செய்தேன் பெரியார் நடுத்தெருவில் உள்ள வீட்டின் மீது ஸ்ரீராம் சிட்பண்டில் ரூபாய்

10 லட்சம் கடன் வாங்கி உள்ளேன் ஆத்தூர் நகராட்சியில் கடைகள் ஏலம் எடுத்ததற்கும் கடைகள் ஒதுக்கீடு செய்ததற்கும் எந்தப் பணமும் வாங்கவில்லை ஸ்கார்பியோ (SCORPIO) கார் HDFC வங்கியில் லோன் போட்டு தவணை முறையில் வாங்கப்பட்டுள்ளது நகைகள் IDBI வங்கியில் அடமானம் வைத்தும் முத்தூட் பைனான்சிலும் அடகு வைத்தும் தான் நிலம் வாங்கினோம் மற்றும் மகனுக்கு திருமணம் செய்தோம் வீடும் தற்போது அடமானத்தில் தான் உள்ளது வீட்டின் மராமத்துப் பணிகள் எல்லாம் கடன் வாங்கித் தான் செய்துள்ளோம் நானோ எனது கணவரோ என்னுடைய பதவியை எந்தவிதத்திலும் முறைகேடாக பயன்படுத்தவில்லை என்று உறுதி செய்கிறேன்

மேற்படி வாக்குமூலத்துடன் தனது மற்றும் தனது கணவரது வங்கி பரிவர்த்தனைகள் தொடர்பான பட்டியல் விவரங்களை (சம்மந்தப்பட்ட வங்கிகளில் இருந்து ஒப்பளிக்கப்பட்டவாறானவை) தாக்கல் செய்தார் எதிர்மனுதாரரது கணவர் பெயரிலான தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கிக் கணக்கில் கடன் தொகை ரூ 6.07.527/- 01-10-16 அன்று பாக்கி உள்ளது அதேபோல் எதிர்மனுதார் திருமதி உமாராணி மற்றும் அவரது கணவர் திரு. V. பிச்சைக்கண்ணன் ஆகியோரது பெயரில் இந்தியன் வங்கிக் கிளையில் கடந்த 5 ஆண்டுகளுக்கான பணப்பரிவர்த்தனைகள் மற்றும் திரு V பிச்சைக்கண்ணன் பெயரில் IDBI வங்கிக் கிளையில் உள்ள பணப்பரிவர்த்தனைகள் குறித்து சம்மந்தப்பட்ட வங்கிகளால சான்றளிக்கப்பட்ட பட்டியல்கள் பரிசீலிக்கப்பட்டன

மனுதாரர் குறிப்பிட்டது போன்ற குற்றச்சாட்டுகள் ஏதும் நிரூபணமாகவில்லை மேலும் மனுதாரர் எதிர் மனுதாரர் நகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதும் ஏற்படுத்தி உள்ளாரா என்பது குறித்து எந்த ஒரு குறிப்பான புகாரோ அல்லது ஆதாரமோ சமர்ப்பிக்கவில்லை எனவே மனுதாரது புகார்கள் ஆதாரமற்றவை. நிரூபணமாகாதவை எனக் கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ம் நாள் என்னால கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது

- //ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது

22/12/2016

செயலாளர்

20.12.16

21/12/16

பெறுநர்:

1. திரு P செல்வராஜன்,
   த/பெ பொன்னுச்சாமி நாயுடு,
   39/19, முனியன் தெரு, புதுப்பேட்டை (அஞ்சல்)
   ஆத்தூர், சேலம் மாவட்டம் - 636 141

2. திருமதி. பி உமாராணி,
   க/பெ V பிச்சைக்கண்ணன்,
   க.எண் 35/17-B, பெரியார் நடுத்தெரு,
   ஆத்தூர், சேலம் மாவட்டம் - 636 141.

3. நகராட்சி ஆணையர்,
   ஆத்தூர் நகராட்சி,
   சேலம் மாவட்டம் - 636 141.